1. மேற்படி பணிகளில் வரிசை எண் 1 மற்றும் 4 –ல் உள்ள பணிகளுக்கு ற்கு ஒப்பந்தபுள்ளிகள் ஏதும் பெறப்படவில்லை . வரிசை எண் 3 உள்ள பணிக்கு ஒரே ஒரு ஒப்பந்தபுள்ளி மட்டும் பெறப்பட்ட நிலையில் மறு ஒப்பந்தபுள்ளி கோரியதை பணியின் அவசியம் கருதி மன்றம் ஏற்கலாம்.

2. வரிசை எண் 2 , 5 மற்றும் 6 – ல் உள்ள பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம் .

   ( ந.க.எண் : 944 /2023 /இ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 419 நாள்: 05.03.2024

**தீர்மானம் :** வரிசை எண் 1 மற்றும் 4 ஒப்பந்தபுள்ளிகள் ஏதும் பெறப்படவில்லை வரிசை எண் 3ல் உள்ள பணிக்கு ஒப்பந்தபுள்ளி பெறப்பட்ட நிலையில், மறு ஒப்பந்தபுள்ளி கோரியதை தொடர்ந்து, மறு ஒப்பந்தபுள்ளி கோரியதை பணியின் அவசியம் கருதி மன்றம் ஏற்கிறது.

வரிசை எண் 2 , 5, 6 க்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி அளிக்கிறது.

## பொருள் எண் 33

பொன்னேரி நகராட்சியில் பொது நிதியின் கீழ் கீழ்க்காணும் விவரப்படியான பணி மேற்கொள்ள 23.02.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சியில் ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள 50 W மற்றும் 200 W LED உயர்மின் கோபுர விளக்குகளில் ஏற்படும் பழுதுகளை சீர் அமைக்கும் பணி மேற்கொள்ளுதல் | 2.00 | ஒப்பந்தபுள்ளிகள் ஏதும் பெறப்படவில்லை | |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | கள்ளுக்கடைமேடு சாலையில் (துகன மையம் அருகில்) சிமெண்ட் சாலை அமைத்தல் | 2.10 | ஓப்பந்தபுள்ளிகள் ஏதும் பெறப்படவில்லை | |
| 3 | நக்கீரன் தெருவில் குடிநீர் வினியோக குழாய்கள் அமைத்தல் | 0.55 | RDS & Co ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.22% குறைவு |
| | | | எஸ். ஆறுமுகம் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 18.78 % அதிகம் |
| 4 | அண்ணா நகர் முதல் பிரதான சாலை தார்ச்சாலை அமைத்தல் | 15.00 | S.K.பூபாலன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.16% குறைவு |
| | | | B. பாலசுப்பிரமணி ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.79 % அதிகம் |
| 5 | கஜலட்சுமி நகர் 2வது தெரு , 3வது தெரு , மூன்றாவது முதல் குறுக்கு தெரு மற்றும் மூன்றாவது 2வது குறுக்கு தெருக்களில் தார்ச்சாலை அமைத்தல் | 19.50 | S.K.பூபாலன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.16% குறைவு |
| | | | B. பாலசுப்பிரமணி ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.79 % அதிகம் |
| 6 | விவேகானந்தர் தெரு ( பாரதி நகர் முதல் எஸ்.எம்.ஆர் நகர் வரை ) மற்றும் அண்ணா தெருக்களில் GSB தளம் அமைத்தல் | 8.70 | SHKP Construction ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.02% குறைவு |
| | | | S.P Builders ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 34.57% அதிகம் |
| 7 | நீலிஅப்பாதுரை தெரு மற்றும் அங்கமுத்து தெரு சந்திப்பில் புதியதாக RCC Box கல்வெர்ட் அமைத்தல் | 2.00 | RDS & Co ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.07% குறைவு |
| | | | எஸ். ஆறுமுகம் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 1.23 % அதிகம் |
| 8 | எட்டியம்மன் கோயில் குறுக்கு தெருவில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் | 4.60 | SHKP Construction ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.07% குறைவு |
| | | | S.P Builders ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 32.63 % அதிகம் |
| 9 | சங்கர் நகர் காமராஜர் தெருவில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் | 5.90 | RDS & Co ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.05% குறைவு |
| | | | எஸ். ஆறுமுகம் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 1.20 % அதிகம் |

அலுவலக குறிப்பு

1. மேற்படி பணிகளில் வரிசை எண் 1 மற்றும் 2–ல் உள்ள பணிகளுக்கு ஒப்பந்தபுள்ளிகள் ஏதும் பெறப்படவில்லை. எனவே மறு ஒப்பந்தபுள்ளி கோர பணியின் அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம் .
2. வரிசை எண் 3 முதல் 9 வரை உள்ள பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம் .

   ( ந.க.எண் 104/2023 /இ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 420 நாள்: 05.03.2024

**தீர்மானம் :** பணிகள் 1 மற்றும் 2–க்கு மறு ஒப்பந்தபுள்ளி பெற மன்றம் அனுமதி வழங்குகிறது. 3 முதல் 9 வரையிலான பணிகளுக்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி அளிக்கிறது.

## பொருள் எண் 34

உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் திருவள்ளூர் அவர்கள் பொன்னேரி – 2 கிராமம், சர்வே எண்.405/2, 406/2– ல் 4412 ச.மீ (1.09 ஏக்கர்) பரப்பளவு உள்ள இடத்தில் குடியிருப்பு மனை பிரிவு அமைக்க தொழில் நுட்ப அனுமதி வழங்கி SWP / DTCP / TVLR / Layout No 213 / 2023 என எண்ணிட்டு மனைப்பிரிவு அமைக்க தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது மேற்படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ள உத்தேச சாலை 1,2,3 (1027.63 ச.மீ) மற்றும் உள்ளாட்சிக்குரிய பகுதி 23.20 ச.மீ (0.69 % ) மற்றும் மின்வாரிய துறைக்கு ( Tangedco ) உரிய பகுதி 28.03 ச.மீ (0.83% ) நிலத்தினை நகராட்சிக்கு தானப்பத்திரமாக பத்திர பதிவு எண் 7118/ 23 நாள் 07.08.2023 ல் எண்ணாக பதியப்பட்டுள்ளது. பொன்னேரி நகராட்சி ஆணையர் பெயருக்கு பதிவு செய்ய இடத்தினை மேற்படி தானப்பத்திரப்படி ஒப்படைக்கப்பட்டுள்ள சொத்து விவரங்களை உள்ளாட்சியின் பராமரிப்பிற்கு ஏற்க ஏதுவாக பின்னேற்பு ஒப்புதலை பெற மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- மன்றம் அனுமதி அளிக்கலாம்
( ந.க.எண் 1310/2023 / F1

நகர்மன்ற தீர்மாண எண்: 421 நாள்: 05.03.2024

**தீர்மானம் :** பொன்னேரி – 2 கிராமம், சர்வே எண்.405/2, 406/2– ல் 4412 ச.மீ (1.09 ஏக்கர்) பரப்பளவு உள்ள இடத்தில் குடியிருப்பு மனை பிரிவு அமைக்க தொழில் நுட்ப அனுமதி வழங்கி , நிலத்தினை நகராட்சிக்கு தானப்பத்திரமாக பத்திர பதிவு எண் 7118/23 நாள் 07.08.2023 எண்ணாக பதியப்பட்டுள்ளது. சொத்து விவரங்களை உள்ளாட்சியின் பராமரிப்பிற்கு ஏற்க ஏதுவாக பின்னேற்பு ஒப்புதலை பெற மன்றத்தின் அனுமதிக்கு, மன்றம் அனுமதி அளிக்கிறது.

## பொருள் எண் 35

பொன்னேரி நகராட்சியில் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் கட்டிட உரிமம், மனைப்பிரிவு ஒப்புதல் போன்றவற்றிற்கான கட்டணங்கள் பொன்னேரி பேரூராட்சியாக இருக்கும் காலத்தில் மன்ற பொருள் 18 நாள் 26. 02.2021ம் தேதிய சாதாரண கூட்ட தொடரில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்போது அரசாணை (நிலை) எண்.116 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.07.12.2021–ல் இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. ஆனால் இந்நாள் வரை மேற்கண்ட கட்டணங்கள் பேரூராட்சியாக இருந்த காலத்தில் வசூலிக்கப்பட்ட கட்டணங்களே வசூலிக்கப்பட்டு வருகிறது. எனவே அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் (நநி1) துறை நாள்.04.02.2019 மற்றும் தமிழ்நாடு அரசிதழ் எண்.43 பகுதி III பிரிவு 1(a) நாள்.04.02.2019–ன்படி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து உள்ளாட்சிகளில் கட்டிட அனுமதி மற்றும் திட்ட அனுமதி வழங்குவது தொடர்பாக தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019–ல் வெளியிடப்பட்டுள்ளது. விதி எண்.14–ல் கட்டிட அனுமதி கட்டணத்தை ஐந்தாண்டுகளுக்கு அனுமதி வழங்குவதற்கேற்பவும், கால நீடிப்பு காலத்தை ஐந்து ஆண்டுகளுக்கு வழங்குவதற்கேற்பவும், மன்ற ஒப்புதலுடன் மாற்றி அமைத்து விதிகளின் படி, கட்டணம் விகிதங்களை பிரசுரம் செய்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளதற்கிணங்க தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 10–3ன்படி கீழ்கண்டுள்ளவாறு திருத்தப்பட்ட கட்டிட உரிமம் கட்டணங்கள் மற்றும் இதர கட்டணங்கள் 01.04.2024 முதல் நடைமுறைப்படுத்திட மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

திருத்தியமைக்கப்பட்ட கட்டட உரிமம் கட்டணம் மற்றும் இதர கட்டணங்களின் விவரம்

| வ. எண் | விவரம் | அளவு | கால அளவு | தற்போது வசூலிக்கப்படும் கட்டணம் | கால அளவு | உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டணம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | மனைபிரிவு அங்கீகார செய்ய (Layout Fees) | ஒரு ஏக்கர் அதன் பாகத்திற்கு | ஒரு முறை மட்டும் | 30000 | ஒரு முறை மட்டும் | 40000 |
| 2 | மனை உட்பிரிவு<br>2 மனைகள் வரை | | ஒரு முறை மட்டும் | - | - | 5000 |
| 3 | கோவில்கள் எதிரிலும், திருவிழா காலங்களிலும் தெருவில் பந்தல் போட்டுக்கொள்ள | திருவிழா நடக்கு கால வரை | - | இலவசம் | - | இலவசம் |
| 4 | கோடைக்கால பந்தல்கள் நகராட்சி தெருவில் போக்குவரத்திற்கு | 1 ச.மீ அதன் பாகத்திற்கு | மூன்று திங்கள் (ஏப்ரல், மே,ஜீன் | | மூன்று திங்கள் (ஏப்ரல்,மே, ஜீன் மாத | |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | இடையூறு இல்லால் போட்டுக்கொள்ள | | மாத மட்டும்) | - | | | மட்டும்) | 100.00 | | |
| 5 | தெருக்களில் போக்குவரத்திற்கு இடையூறு இன்றி கட்டட சாமான்கள் சேகரித்து வைக்க | 10 ச.மீ அதன் பாகத்திற்கு | - | கட்டிட உரிமம் கட்டணத்தில் 30 சதவீதம் வசூல் செய்யப்படும் | | | ஒரு முறை மட்டும் | | | |
| | **குடிசை அல்லாத ஒரு கட்டடத்தை கட்ட அல்லது புதுப்பித்து கட்ட, கூடுதல் கட்டடம் கட்ட அனுமதி அளித்தல்** | | | குடியிருப்பு | வணிகம் | தொழிற்சாலை | | குடியிருப்பு | வணிகம் | தொழிற்சாலை மற்றும் பள்ளி கல்வி கூடம் |
| | 1. இட ஆய்வு கட்டணம் | ஒரு முறை மட்டும் | ஒரு முறை மட்டும் | 2000 | - | - | | 3000 | 4000 | 5000 |
| | 2. ஓட்டுக்கூரை, தகரக்கூரை, சிமெண்ட் சீட் கூரை மற்றும் லைட்ரூப் அமைக்க | 10 ச.மீ அதன் பாகத்திற்கு | ஐந்து ஆண்டுகளுக்கு | | | | ஐந்து ஆண்டுகளுக்கு | 75 | 150 | 450 |
| | 3. ஆர்.சி.சி மற்றும் தட்டோடு தரைதளம் மற்றும் தரை கீழ்தளம் (Basement Floor) அமைக்க | 10 ச.மீ அதன் பாகத்திற்கு | ஐந்து ஆண்டுகளுக்கு | 1 ச.அடி ரூ.20/– | | | ஐந்து ஆண்டுகளுக்கு | 300 | 350 | 800 |
| | 4. முதல் தளம் கட்டடம் கட்ட | 10 ச.மீ அதன் பாகத்திற்கு | ஐந்து ஆண்டுகளுக்கு | | | | ஐந்து ஆண்டுகளுக்கு | 350 | 360 | 820 |
| | 5. இரண்டாம் தளம் கட்டடம் கட்ட | 10 ச.மீ அதன் பாகத்திற்கு | ஐந்து ஆண்டுகளுக்கு | | | | ஐந்து ஆண்டுகளுக்கு | 360 | 380 | 840 |
| | 6. மூன்றாம் தளம் மற்றும் அதற்கு மேலும் தளம் கட்டடம் கட்ட | 10 ச.மீ அதன் பாகத்திற்கு | ஐந்து ஆண்டுகளுக்கு | | | | ஐந்து ஆண்டுகளுக்கு | 380 | 400 | 860 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7. கழிவறை கட்ட | ஒன்றுக்கு | ஐந்து ஆண்டுகளுக்கு | 1000 | ஐந்து ஆண்டுகளுக்கு | 1000 | | |
| | 8. நச்சு தொட்டி கட்ட | ஒன்றுக்கு | ஐந்து ஆண்டுகளுக்கு | | ஐந்து ஆண்டுகளுக்கு | 500 | | |
| | 9. கிணறு அல்லது ஆழ்துளை கிணறு அமைக்க | ஒன்றுக்கு | ஐந்து ஆண்டுகளுக்கு | 1000 | ஐந்து ஆண்டுகளுக்கு | 1500 | | |
| | 10. சுவர் அல்லது வேலி முதலியவை அமைத்தல் 2.4 மீட்டர் உயரம் மேற்படாமல் | 1 அடி நீளத்திற்கு | ஐந்து ஆண்டுகளுக்கு | சுற்றுச்சுவர் கட்டணம் ரூ1500 மட்டும் | ஐந்து ஆண்டுகளுக்கு | 30 | 60 | 90 |
| | 11. மாடிப்படி | | ஐந்து ஆண்டுகளுக்கு | - | ஐந்து ஆண்டுகளுக்கு | 500 | | |
| | 12. மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி | ஒன்றுக்கு | ஐந்து ஆண்டுகளுக்கு | - | ஐந்து ஆண்டுகளுக்கு | 500 | | |
| | 16. நகர வரைப்பட நகல் வழங்க | ஒன்றுக்கு | - | 500 | - | 1000 | | |
| | 17. நகராட்சியால் வழங்கப்படும் சான்று ஒன்றுக்கு கட்டணம் | நகல் ஒன்றுக்கு | - | - | - | 1000 | | |
| | 18.பழைய கட்டடம் இடிப்பு கட்டணம் | - | - | - | ஒரு முறை மட்டும் | ரூ.50/- ஒரு சதுர அடிக்கு | | |
| | 19. சாலை அபிவிருத்தி கட்டணம் | 1 சதுர அடிக்கு | - | நகராட்சி | ஒரு முறை மட்டும் | சாலை அபிவிருத்தி கட்டணம் நகராட்சி பொறியாளரின் மதிப்பீடு அடிப்படையில் வசூலிக்கப்படவேண்டும். | | |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | **ஆய்வுக் கட்டணம் (தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019 விதி எண்.7** | | | | | | | | | | |
| | | கட்டடிட வரைப்படம் சமர்பிக்கும்போது | சதுர மீட்டருக்கு | | | | | | | | 2.00 |
| | | முதல் திருத்திய கட்டிட வரைப்படம் | சதுர | | | | | | | | 1.00 |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | சமர்பிக்கும்போது | மீட்டருக்கு | | | | | | | | |
| | | இரண்டாம் திருத்திய கட்டிட வரைப்படம் சமர்பிக்கும்போது | சதுர மீட்டருக்கு | | | | | | | | 0.40 |
| | | மூன்றாம் திருத்திய கட்டிட வரைப்படம் சமர்பிக்கும்போது | சதுர மீட்டருக்கு | | | | | | | | 0.20 |
| | | அடுத்தடுத்து சமர்பிக்கும் திருத்திய கட்டிட வரைப்படங்களுக்கு | சதுர மீட்டருக்கு | | | | | | | | - |
| 9 | **நகராட்சி வரைப்பட வரைவாளராக உரிமம் வழங்க** | | | | | | | | | | |
| | | 1. பதிவுக் கட்டணம் | ஒரு முறை மட்டும் | ஒரு முறை மட்டும் | - | ஒரு முறை மட்டும் | 5000 | 1. பதிவுக் கட்டணம் | ஒரு முறை மட்டும் | ஒரு முறை மட்டும் | 1. பதிவுக் கட்டணம் |
| | | தொழிலாளர் நல வாரிய கட்டணம் | பொதுப்பணித்துறையின் கட்டண விகிதங்களின் அடிப்படையில் கட்டிட மதிப்பீட்டில் 1 சதவீதம் கட்டணம் வசூலிக்கப்படும் ( As per PWD Schedule of Rate ) | | | | | | | | |

10. அனுமதியின்றி கட்டட பணி துவங்கப்பட்டிருப்பின் கட்டட உரிமம் கட்டணத்தில் கூடுதலாக 50 சதவீதம் வசூலிக்கப்படும்.

11. குடியிருப்பு கட்டிடத்திற்கு மழைநீர் சேகரிப்பு வைப்புத் தொகை ரூ.5000/- மற்றும் வணிகம் தொழிற்சாலை கட்டிடத்திற்கு ரூ. 10000 வசூல் செய்யப்பட வேண்டும். மழைநீர் சேமிப்பு அமைப்பு கட்டியபின் மனுதாரர் உரிய புகைப்படம் ஆதாரத்துடன் இணைத்து மனு செய்யும் பட்சத்தில் தல ஆய்வு செய்து இந்த தொகை திரும்ப வழங்கப்படும்.

12. அனுமதி காலம் முடியும் முன்பாக 30 நாட்களுக்கு முன்பு கால நீடிப்பு அனுமதி கோரும் மனுவிற்கு தற்போது வசூலிக்கப்படும் கட்டணங்களின்படி, கட்டணங்கள் முழுவதும் செலுத்திய பின்னர் ஒருமுறை மட்டுமே 3 ஆண்டுகளுக்கு கால நீடிப்பு அனுமதி வழங்கப்படும். மேற்கண்ட கட்டிட உரிமத்திற்கான கட்டணங்களை வசூல் செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக்குறிப்பு</u>**

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்
( **ந.க.எண்** 256/2024/F1)

நகர்மன்ற தீர்மாண எண்: 422 நாள்: **05.03.2024**

**தீர்மானம் :** கட்டிட உரிமம், மனைப்பிரிவு ஒப்புதல் போன்றவற்றின் கட்டணங்கள் பேரூராட்சியாக இருந்த காலத்தில் வசூலிக்கப்பட்ட கட்டணங்கள் வசூலிக்கப்பட்டு வருகிறது. தமிழ் நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 10 –3ன்படி திருத்தப்பட்ட கட்டிட உரிமம் கட்டணங்கள் மற்றும் இதர கட்டணங்கள் 01.04.2024 முதல் நடைமுறைப்படுத்திட மன்றத்தின் ஒப்புதலுக்கு – மன்றம் ஒப்புதல் அளிக்கிறது.

## <u>பொருள் எண் 36</u>

பொன்னேரி நகராட்சியில் பொதுசுகாதார பிரிவிற்கு தேவையான கிருமிநாசினிகள் மற்றும் இதரப்பொருட்கள் சப்ளை செய்ய 23.02.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|---|
| 1 | பொது சுகாதாரத்திற்கு தேவையான கிருமிநாசினிகள் மற்றும் இதர பொருட்கள் சப்ளை செய்தல் | 20.00 | Thadchanya Enterprises ஒப்பந்ததாரர் |
| | | | Sukguru Society Services ஒப்பந்ததாரர் |

<u>அலுவலக குறிப்பு</u>

1. மேலும் ஒப்பந்தபுள்ளி படிவத்தில் வரிசை எண் 2,34,38,42, மற்றும் 5 ல் குறிப்பிட்டுள்ள பொது சுகாதார பணிக்கு அத்தியாவசியமான பிளீச்சிங் பவுடர், Drainage Sppon, Drainage Plate , Gloves . Baytex ஆகிய பொதுசுகாதார உதிரி பொருட்களுக்கு Thadchanya Enterprises நிறுவனம் மிகவும் குறைந்த ஒப்பந்தபுள்ளி பெறப்பட்டுள்ளது. மேற்படி விலையில் அரசு அங்கீகரிக்கப்பட்ட தரக் குறியீட்டின் படி பொருட்கள் சப்ளை செய்ய இயலாது ஆதலால் தரமற்றதாக இருக்க வாய்ப்புள்ளது.

2. மேலும் ஒப்பந்தபுள்ளி படிவத்தில் வரிசை எண் 35 மற்றும் 40 ல் குறிப்பிட்டுள்ள Plastic Box மற்றும் Mask ஆகிய சுகாதார பணிக்கு அத்தியாவசிய பொருட்களுக்கு Thadchanya Enterprises நிறுவனம் மிகவும் அதிக அளவில் ஒப்பந்தபுள்ளி வழங்கியுள்ளது. மேற்படி விலையில் பொருட்கள் சப்ளை செய்யப்பட்டால் அவை நிர்வாகத்திற்கு இழப்பாகும் .

3. மேற்படி பணியில் Thadchanya Enterprises என்ற நிறுவனத்தை விட Sukguru Society Services நிறுவனம் மொத்தமுள்ள ஒப்பந்தபுள்ளி படிவத்தில் குறிப்பிட்டுள்ள 42 பொதுசுகாதார பணிக்கு அத்தியாவசியமான பொருட்களில் 29 பொருட்களுக்கு குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கியுள்ளார்கள்.மேற்படி 29 பொருட்களும் சுகாதார

பணிக்காக தினந்தோறும் தொடர்ந்து பயன்படுத்தும் பொருட்கள் என்பதாலும், நிர்வாகத்திற்கு இழப்பீடு ஏற்படாவண்ணம் இருக்க Sukguru Society Services நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்

**( ந.க.எண் 341/2022 /இ1)**

நகர்மன்ற தீர்மாண எண்: 423 நாள்: **05.03.2024**

**தீர்மானம் :** பொது சுகாதார பிரிவிற்கு தேவையான கிருமிநாசினிகள் மற்றும் இதர பொருட்கள் சப்ளை செய்ய **23.02.2024** அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில், Sukguru Enterprises **29** அத்தியாவசியமான பொருட்களுக்கு குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கியுள்ளார்கள் – இந்த நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்க மன்ற அனுமதி வேண்டியுள்ளதால் , மன்றம் அனுமதி வழங்குகிறது.

## பொருள் எண் 37

பொன்னேரி நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு அனைத்து நிர்வாக பணிகள் கணினி மயமாக்கப்பட்டதால் தினசரி கணினி வசூல் மையத்தில் வரிவசூல் பணி மேற்கொள்ளவும், பிறப்பு இறப்பு பதிவு செய்தல், பிறப்பு இறப்பு சான்றுகளை கணிணியிலிருந்து பதிவிறக்கம் செய்தல் பணிக்காக இரு கணிணி இயக்குபவர்கள், நான்கு வாம்பே கழிவறை பராமரிப்பவர், ஐந்து பம்பு ஆப்ரேட்டர் மற்றும் ஒரு இரவு காவலர் ஆகியோரை அன்னை அஞ்சுகம் சுய உதவிக்குழுவின் மூலம் வெளிக்கொணர்வு முறையில் பணிக்கு அமர்த்திக் கொள்ளவும் ஊதியம் பொதுநிதியிலிருந்து வழங்கிடவும், நகர்மன்ற தீர்மானம் எண் **336**, நாள் **31.10.2023**ன் படி ஒப்புதல் வழங்கப்பட்டு அலுவலக பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ந்து அலுவலகப்பணிகள் தொய்வின்றி மேற்கொள்ளும் பொருட்டு மேற்படி பணியாளர்களை **01.02.2024** முதல் **30.04.2024** வரை முன்று மாதங்களுக்கு பணி நீட்டிப்பு செய்யவும், செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
( ந.க.எண். 677/2021/அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 424 நாள்: **05.03.2024**

**தீர்மானம் :** அன்னை அஞ்சுகம் சுய உதவிக்குழுவின் மூலம் வெளிக்கொணர்வு முறையில் பணியாளர்களை பணிக்கு அமர்த்திக் கொள்ள **01.02.2024** முதல் **30.04.2024** வரை பணி நீட்டிப்பு செய்ய செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு – மன்றம் ஒப்புதல் வழங்குகிறது

## பொருள் எண் 38

பொன்னேரி நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு அனைத்து நிர்வாக பணிகள் கணினி மயமாக்கப்பட்டதால் தினசரி மேற்கொள்ளப்பட வேண்டிய வரிவசூல் பணிகள், அலுவலகப்பணிகள்,

திட்டப்பணிகள், தேர்தல் பணிகள் ஆகியவற்றை மேற்கொள்ள நகராட்சி பணியாளர்கள் எவரும் இல்லாததால் கணினி தொடர்பான அனைத்து பணிகள் மேற்கொள்ள திருமதி. K.U. ஸ்ரீலக்ஷ்மி என்பவரை 2023-2024ம் ஆண்டு மாவட்ட ஆட்சியர் தினக்கூலி விகிதத்தின்படி பணிக்கு அமர்த்திக்கொள்ளவும், ஊதியம் பொதுநிதியிலிருந்து வழங்கிடவும், தனிஅலுவலர் கூட்ட தீர்மானம் எண் 336 நாள் 31.10.2023 ன்படி அனுமதி வழங்கப்பட்டு அலுவலக பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ந்து அலுவலகப்பணிகள் தொய்வின்றி மேற்கொள்ளும் பொருட்டு மேற்படி பணியாளரை 01.02.2024 முதல் 30.04.2024 வரை மூன்று மாதங்களுக்கு பணி நீட்டிப்பு செய்யவும், செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும், மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
   ( ந.க.எண். 677 /2021 அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 425 நாள்: 05.03.2024

**தீர்மானம்:** 2023-2024ம் ஆண்டு மாவட்ட ஆட்சியர் தினக்கூலி விகிதத்தின்படி பணிக்கு திருமதி. K.U. ஸ்ரீலக்ஷ்மி என்பவரை கணினி தொடர்பான அனைத்து பணிகள் மேற்கொள்ள செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும் 01.02.2024 முதல் 30.04.2024 வரை பணி நீட்டிப்பு செய்யவும் மன்ற ஒப்புதலுக்கு , மன்றம் ஒப்புதல் அளிக்கிறது.

**<u>பொருள் எண் 39</u>**

பொன்னேரி நகராட்சியில் மீன்வளத்துறை பல்கலைக்கழகம், அரசு மற்றும் தனியார் கல்லூரிகள், 7 அரசு பள்ளிகள் மற்றும் 8 தனியார் பள்ளிகளும் உள்ளன. மேற்படி பள்ளி கல்லூரிகளில் பயிலும் சுமார் 8000க்கும் மேற்பட்ட மாணவர்கள் மேற்படி மாணவர்கள் கல்வி கற்கவும், பல்வேறு துறை சார்ந்த அறிவினை பெருக்கிக்கொள்ள ஏதுவாக நகரின் மையப்பகுதியில் ஒரு அறிவுசார் மையம் (Knowledge Centre) அமைப்பதற்காக அறிவுசார் மையம் அமைப்பதற்கு நகராட்சிக்கு சொந்தமான நிலம் ஏதும் இல்லாததால், உலகநாத நாராயணசாமி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு சொந்தமான சர்வே எண். 515/2A1-ல் அமைந்துள்ள 0.34 ஹெக்டேர் விஸ்தீரணம் உள்ள இடத்தில் ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் அறிவுசார் மையம் ( Knowledge Centre) அமைக்க கருத்துரு அனுப்பப்பட்டு நிலமாற்றம் தொடர்பான பணியின் தாமதத்தால் திருப்பி அனுப்பப்பட்ட (Knowledge Centre) அறிவுசார் மையம் அமைப்பதற்கான பணியின் கோப்புகளை மேல் நடவடிக்கைக்கு மீண்டும் அனுப்பி மேற்படி திட்டத்தை செயல்படுத்த மன்றத்தின் ஒப்புதலுக்கு.

நகர்மன்ற தீர்மாண எண்: 426 நாள்: 05.03.2024

**தீர்மானம் :** உலகநாத நாராயணசாமி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு சொந்தமான சர்வே எண். 515/2A1-ல் அமைந்துள்ள 0.34 ஹெக்டேருக்கு ரூ.2.00 கோடி மதிப்பீட்டில் அறிவுசார் மையம் அமைப்பதற்கான பணியின் கோப்புகளை மேல் நடவடிக்கைக்கு மீண்டும் அனுப்பி மேற்படி திட்டத்தை செயல்படுத்த மன்றத்தின் ஒப்புதலுக்கு. மன்றம் ஒப்புதல் அளிக்கிறது.

## பொருள் எண் 40

பொன்னேரி நகராட்சியில் வரிவசூல் உள்ளிட்ட அனைத்து துறை பணிகளும், UTIS மென்பொருள் மூலம் நடைபெறுவதால் கணினியில் பதிவேற்றம் செய்வதற்கு 8 எண்ணிகையிலான கணிணிகளை அனைத்து பிரிவு அலுவலர்களும் பயன்படுத்துகின்றனர். மேற்படி கணிணிகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரிபார்க்கும் பணியினை மேற்கொள்ளவும், தேவைபடும் கணிணி உதிரிபொருட்களை வாங்கி பொருத்தவும், பிரிண்டர்களின் டோனர்களை ரீபில் செய்யவும், வருடாந்திர பராமரிப்பு ( AMC ) முறையில் மேற்கொள்ளவும், பொறியியல் பிரிவின் திட்டப்பணிகளுக்கான Cad Drawing தயார் செய்யவும், இவ்வலுவலகத்தில் பணியாளர்கள் இல்லாததால் விலைப்புள்ளிகள் பெற்று மேற்படி பணிகளை மேற்கொள்ளவும் நகர்மன்ற தீர்மானம் எண்: 258 நாள்: 31.07.2023ன் வாயிலாக அனுமதி வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி நிதி ஒதுக்கீட்டு தொகை இருப்பு இல்லாததால் தொடர்ந்து மேற்படி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் தோராய செலவினம் ரூ 1.00 லட்சம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
(ந.க.எண்:133/2023 /அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 427 நாள்: 05.03.2024

**தீர்மானம் :** அனைத்து துறை பணிகளும், UTIS மென்பொருள் மூலம் நடைபெறுவதால் வருடாந்திர பராமரிப்பு முறையில் மேற்கொள்ளவும், நிதி ஒதுக்கீட்டு தொகை இருப்பு இல்லாததால் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் தோராய செலவினம் ரூ 1.00 இலட்சம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற ஒப்புதல் கோரபட்டு மன்றம் ஒப்புதல் அளிக்கிறது.

## மேசைப்பொருள் எண் 41

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் வாய்மொழி உத்திரவின்படி பொன்னேரி நகராட்சியில் மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட இடங்களில் தூய்மை பணி மேற்கொண்ட நகராட்சி தூய்மை பணியாளர்கள், DBC பணியாளர்கள் , பரப்புரையாளர்கள் மற்றும் மதுரை மாநகராட்சியிலிருந்து சிறப்பு தூய்மை பணி மேற்கொள்ள வரவழைக்கப்பட்ட 45 நபர்கள், NDRF பணியாளர்கள் மற்றும் மருத்துவக்குழுவினர் என மொத்தம் 241 நபர்கள் வீதம் 01.12.2023 முதல் 12.12.2023 வரை மீட்புப்பணிகளில் ஈடுபட்டனர். மேற்படி பணியாளர்களுக்கு தேவையான தேநீர், உணவு, குடிநீர் மற்றும் பிஸ்கட் வாங்கியமைக்கு 57ன் கீழ் தொகை ரூ.5,53,180 /- வழங்கக்கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை வழங்கவும், செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளவும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு ஒப்புதல் வழங்கலாம்.

( ந.க.எண். 354 /2023/எச்1)

நகர்மன்ற தீர்மாண எண்: 428 நாள்: **05.03.2024**

**தீர்மானம்:**

## மேசைப்பொருள் எண் 42

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28. அவர்களின் கடிதம் ந.க.எண்.**29766/2021**/எச்.**1** நாள்.**11.12.2023–** ன்படி பொன்னேரி நகராட்சியில் மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி சிறப்பு தூய்மை பணி மேற்கொள்ள மதுரை மாநகராட்சியிலிருந்து **1** துப்புரவு ஆய்வாளர் மற்றும் **44** தூய்மை பணியாளர்கள் கூடுவாஞ்சேரிலிருந்து பொன்னேரிக்கும் மீண்டும் சிறப்பு தூய்மை பணி முடிந்த பின்பு பொன்னேரியில் இருந்து கூடுவாஞ்சேரிக்கும் செல்வதற்கும் மற்றும் மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட மக்கள், முகாம்களுக்கு உணவு வழங்க வாகனம் பயன்படுத்தியதற்கு செலவினமாக ரூ.**46000/–** பொதுநிதிலிருந்து மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி
2. நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு ஒப்புதல் வழங்கலாம்.

( ந.க.எண். 354 /2023/எச்1)

நகர்மன்ற தீர்மாண எண்: 429 நாள்: **05.03.2024**

**தீர்மானம்:** சிறப்பு தூய்மை பணியாளர்கள் பொன்னேரியில் மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட மக்கள், முகாம்களுக்கு உணவு வழங்க வாகனம் பயன்படுத்தியதற்கு செலவினமாக ரூ.**46000/–** பொதுநிதிலிருந்து மேற்கொள்ள தலைவரின் முன் அனுமதி பெற்று நடவக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்குகிறது.

## மேசைப்பொருள் எண் 43

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில், பயன்படுத்தப்பட்டு வரும் **14** எண்ணிக்கை புஷ்கார்ட் (PushCart) வாகனங்கள் மற்றும் **4** எண்ணிக்கையிலான வாகனங்கள் மூன்று சக்கர மிதிவண்டிகள் பழுதடைந்து இருந்ததை பொதுசுகாதார பணியின் அவசர அவசியம் கருதி பழுது நீக்கம் செய்தமைக்காக வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ. **64,430/-** மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2. மேற்படி செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.
(ந.க.எண்: 626/2022 /H1)

நகர்மன்ற தீர்மாண எண்: 430 நாள்: 05.03.2024

**தீர்மானம்:** பொது சுகாதார பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் வாகனங்கள் பழுது நீக்கம் செய்தமைக்காக வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ. 64,430/-, செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு – மன்றம் அனுமதி அளிக்கிறது.

## மேசைப்பொருள் எண் 44

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொது மக்களின் குடிநீர் தேவைக்காக 2023–24–ம் ஆண்டின் கணக்கின்படி ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள 67 எண்ணிக்கையிலான ஆழ்துளை குழாய் கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள நீர்முழ்கி மின்மோட்டர்கள் மூலம் குடிநீர் உறிஞ்சப்பட்டு மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் மூலமாகவும், நேரடியாகவும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அவ்வாறு பயன்பாட்டில் உள்ள ஆழ்துளை குழாய் கிணறுகள் பொருத்தப்பட்டுள்ள மின்மோட்டார்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை ரூ.5.00 இலட்சம் செலவினத்தில் உடனுக்குடன் சீர்செய்யும் பணிக்கு இந்நகர்மன்றம் தனது தீர்மான எண்.303, நாள்.29.09.2023–ன்படி நிர்வாக அனுமதி அளித்ததை தொடர்ந்து, 26.10.2023–ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் திரு.எல்.ஜி.அரசு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை இந்நகர்மன்றம் தனது தீர்மான எண்.345, நாள்.30.11.2023–ன்படி ஏற்றுக்கொண்டதை தொடர்ந்து, நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.104/2023/அ1, நாள்.30.11.2023–ன்படி பணி உத்திரவு வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வந்த நிலையில் இப்பணிக்கான ஒப்பந்தக்காலம் 29.02.2024–வுடன் முடிவடையவுள்ள நிலையில் உள்ளதால் குடிநீர் பணியின் அவசியம் கருதியும், எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தல் அறிவிப்பு வெளியாகி தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வரவுள்ளதால் உரிய நிர்வாக அனுமதி மற்றும் ஒப்பந்தபுள்ளிகள் கோரி இறுதி செய்ய காலதாமதம் ஏற்படும் நிலையுள்ளதால் தற்போது பணி மேற்கொண்டு வரும் திரு.எல்.ஜி. அரசு , ஒப்பந்ததாரர் அவர்களுக்கு இதே ஒப்பந்த விலை விகிதத்தின் அடிப்படையில் 31.05.2024 வரை பணியினை தொடரவும் அதற்கான தோராய செலவினம் ரூ.5.00 இலட்சத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

அ) மேற்படி பணிக்கான ஆகும் தோராய செலவினம் ரூ.5.00 இலட்சத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.
(ந.க.எண் 104/2023/இ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 431 நாள்: 05.03.2024

**தீர்மானம்:**

## மேசைப்பொருள் எண் 45

பொன்னேரி நகராட்சியில் 2024-2025 ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டம் மன்றத்தின் பார்வைக்கு.

அலுவலக குறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண் /2023 /அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 432 நாள்: **05.03.2024**

**தீர்மானம்:** 2024-2025 ஆண்டிற்கான வரவு செலவு திட்டம் மன்றத்தின் பார்வைக்கு. மன்றம் ஒப்புதல் வழங்குகிறது.

## மேசைப்பொருள் எண் 46

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மாநில பேரிடர் மேலாண்மை திட்டம் **2023–24**ம் நிதியாண்டின் கீழ் நிரந்தர வெள்ளத்தடுப்பு பணியாக மழைநீர் வடிகால்வாய் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவ்வாறு மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை வடகிழக்கு பருவமழையின் போது நேரடி களஆய்வு மேற்கொண்ட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அறிவுரையின்படி தற்போது மழைநீர் வடிகால்வாய் பணிகள் நடைபெற்று வரும் இரயில்வே நிலைய சாலை, திருவொற்றியூர் நெடுஞ்சாலை மற்றும் புதிய தேரடி தெரு ஆகிய சாலைகளில் தேங்கும் மழைநீர் தடையின்றி செல்ல ஏதுவாக Slit Catch Pit அமைக்க அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.12.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிகளை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்:951/**2022** /E1)

நகர்மன்ற தீர்மாண எண்: 433 நாள்: **05.03.2024**

**தீர்மானம்:**

## மேசைப்பொருள் எண் 47

பொன்னேரி நகராட்சி **11** வது வார்டுக்குட்பட்ட தாயுமான் **1**வது தெரு மற்றும் தாயுமான் **1**வது குறுக்கு தெருக்களில் பாதாள சாக்கடை பணிகள் முடிவுற்றதாலும், இயற்கை இடர்பாடுகளாலும் , சாலை மிகவும் பழுதடைந்து மழைக்காலங்களில் மழைநீர் தேங்குவதால் போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் மிகவும் சிரமமாக உள்ளதால் மேற்படி சாலைகளை சீரமைத்து தருமாறு அப்பகுதியின் நகர்மன்ற உறுப்பினர் கோரியதை தொடர்ந்து அப்பகுதியில்

ஆணையர் மற்றும் நகர்மன்ற தலைவர் ஆகியோர் நேரில் ஆய்வு செய்ததை தொடர்ந்து இச்சாலைகளை உடனடியாக சீரமைக்குமாறு நகர்மன்ற தலைவர் அறிவுறுத்தியதின்படி மேற்படி சாலைகளை சிமெண்ட் சாலைகளாக சீரமைக்கவும், அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.15.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. பொதுமக்களின் அடிப்படை வசதியினை கருத்திற்கொண்டு மேற்படி பணியினை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ளவும், ஒப்பந்தபுள்ளி கோரி நடவடிக்கை தொடரவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண் 104/2023 /அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 434 நாள்: 05.03.2024

**தீர்மானம் :** 11 வது வார்டு தாயுமான் 1வது தெரு, 1வது குறுக்கு தெரு சிமெண்ட் சாலைகளாக சீரமைக்கவும், மதிப்பீட்டு தொகை ரூ.15.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுவதால் மன்றம் அனுமதி அளிக்கிறது. மேற்படி பணியினை பொதுநிதியில் மேற்கொள்ளவும் ஒப்பந்தபுள்ளி கோரி நடவடிக்கை தொடரவும் மன்றம் அனுமதி வழங்குகிறது.

## மேசைப்பொருள் எண் 48

பொன்னேரி நகராட்சி 11 வது வார்டுக்குட்பட்ட தாயுமான் 2வது தெரு மற்றும் தாயுமான் 3வது குறுக்கு தெருக்களில் பாதாள சாக்கடை பணிகள் முடிவுற்றதாலும், இயற்கை இடர்பாடுகளாலும் , சாலை மிகவும் பழுதடைந்து மழைக்காலங்களில் மழைநீர் தேங்குவதால் போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் மிகவும் சிரமமாக உள்ளதால் மேற்படி சாலைகளை சீரமைத்து தருமாறு அப்பகுதியின் நகர்மன்ற உறுப்பினர் கோரியதை தொடர்ந்து அப்பகுதியில் ஆணையர் மற்றும் நகர்மன்ற தலைவர் ஆகியோர் நேரில் ஆய்வு செய்ததை தொடர்ந்து இச்சாலைகளை உடனடியாக சீரமைக்குமாறு நகர்மன்ற தலைவர் அறிவுறுத்தியதின்படி மேற்படி சாலைகளை சிமெண்ட் சாலைகளாக சீரமைக்கவும், அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.5.60 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. பொதுமக்களின் அடிப்படை வசதியினை கருத்திற்கொண்டு மேற்படி பணியினை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ளவும், ஒப்பந்தபுள்ளி கோரி நடவடிக்கை தொடரவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண் 104/2023 /அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 435 நாள்: 05.03.2024

**தீர்மானம்:** 11 வது வார்டு தாயுமான் 2வது தெரு, 3வது குறுக்கு தெரு மேற்படி சாலைகளை சிமெண்ட் சாலைகளாக சீரமைக்க, மதிப்பீடு ரூ.5.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்பட்டு மன்றம்

அனுமதி அளிக்கிறது. மேற்படி பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள ஒப்பந்தபுள்ளி கோரி நடவடிக்கை தொடரவும் மன்றம் அனுமதி அளிக்கிறது.

## மேசைப்பொருள் எண் 49

பொன்னேரி நகராட்சியில் 9 வது வார்டுக்குட்பட்ட குளக்கரை தெருவில் உள்ள மழைநீர் கால்வாய் பழுதடைந்து உள்ளதால் மழைக்காலங்களில் மழைநீர் கால்வாயில் வழிந்தோடாமல் சாலையில் தேங்குவதால் போக்குவரத்திற்கும், பொதுசுகாதாரத்திற்கும் கேடு விளைவிக்கும் நிலை உள்ளது. அதனை தொடர்ந்து அப்பகுதியின் நகர்மன்ற உறுப்பினர் கோரியதின்படி குளக்கரை தெருவில் உள்ள பழுதடைந்த மழைநீர் கால்வாயினை சீரமைக்கவும், அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ. 13.80 இலட்சத்திற்கு மன்றத்திற்கு அனுமதி வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. பொதுமக்களின் அடிப்படை வசதியினை கருத்திற்கொண்டு மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்படி பணிக்கான செலவினத்தினை அரசின் நிதியுதவி/பொதுநிதியின்கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 104 /2023 அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 436 நாள்: **05.03.2024**

**தீர்மானம்: 9** வது வார்டு குளக்கரை தெருவில் உள்ள மழைநீர் கால்வாய் பழுதடைந்து உள்ளதால் சீரமைக்கவும், மதிப்பீட்டு தொகை ரூ. 13.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டியுள்ளது. மன்றம் அனுமதி அளிக்கிறது. மேற்படி பணிக்கான செலவினத்தினை அரசின் நிதியுதவி / பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதியளிக்கிறது.

## மேசைப்பொருள் எண் 50

பொன்னேரி நகராட்சியில் 13 வது வார்டுக்குட்பட்ட அதாவுல்லாஷா தெரு, அங்கமுத்து தெரு மற்றும் கிருஷ்ணசாமி தெருக்களில் உள்ள மழைநீர் கால்வாய்கள் பழுதடைந்து உள்ளதால் மழைக்காலங்களில் மழைநீர் கால்வாயில் வழிந்தோடாமல் சாலையில் தேங்குவதால் போக்குவரத்திற்கும், பொதுசுகாதாரத்திற்கும் கேடு விளைவிக்கும் நிலை உள்ளது. அதனை தொடர்ந்து அப்பகுதியின் நகர்மன்ற உறுப்பினர் கோரியதின்படி அதாவுல்லாஷா தெரு, அங்குமுத்து தெரு மற்றும் கிருஷ்ணசாமி தெருக்களில் உள்ள பழுதடைந்த மழைநீர் கால்வாயினை சீரமைக்கவும், அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ. 13.20 இலட்சத்திற்கு மன்றத்திற்கு அனுமதி வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. பொதுமக்களின் அடிப்படை வசதியினை கருத்திற்கொண்டு மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்படி பணிக்கான செலவினத்தினை அரசின் நிதியுதவி/பொதுநிதியின்கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
   (ந.க.எண். 104 /2023 அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 437 நாள்: **05.03.2024**

**தீர்மானம் : 13** வது வார்டு அதாவுல்லாஷா தெரு, அங்கமுத்து தெரு மற்றும் கிருஷ்ணசாமி தெருக்களில் உள்ள பழுதடைந்த மழைநீர் கால்வாயினை சீரமைக்கவும், மதிப்பீட்டு தொகை ரூ. 13.20 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டியுள்ளதால் மன்றம் அனுமதி வழங்குகிறது. மேற்படி பணிக்கான செலவினத்தினை அரசின் நிதியுதவி / பொதுநிதியின்கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்குகிறது.

## <u>மேசைப்பொருள் எண் 51</u>

பொன்னேரி நகராட்சியில் 15 வது வார்டுக்குட்பட்ட வரதப்பன் தெருவில் உள்ள மழைநீர் கால்வாய் பழுதடைந்து உள்ளதால் மழைக்காலங்களில் மழைநீர் கால்வாயில் வழிந்தோடாமல் சாலையில் தேங்குவதால் போக்குவரத்திற்கும், பொதுசுகாதாரத்திற்கும் கேடு விளைவிக்கும் நிலை உள்ளது. அதனை தொடர்ந்து அப்பகுதியின் நகர்மன்ற உறுப்பினர் கோரியதின்படி வரதப்பன் தெருவில் உள்ள பழுதடைந்த மழைநீர் கால்வாயினை சீரமைக்கவும், அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ. 4.90 இலட்சத்திற்கு மன்றத்திற்கு அனுமதி வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. பொதுமக்களின் அடிப்படை வசதியினை கருத்திற்கொண்டு மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்படி பணிக்கான செலவினத்தினை அரசின் நிதியுதவி/பொதுநிதியின்கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 104 /2023 அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 438 நாள்: **05.03.2024**

**தீர்மானம்: 15** வது வார்டு வரதப்பன் தெருவில் உள்ள மழைநீர் கால்வாய் பழுதடைந்து உள்ளதால் சீரமைக்க மதிப்பீட்டு தொகை ரூ. 4.90 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டி, மன்றம் அனுமதி வழங்குகிறது. மேற்படி பணியினை மேற்கொள்ளவும் செலவினத்தினை அரசு நிதி / பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்குகிறது.

## மேசைப்பொருள் எண் 52

பொன்னேரி நகராட்சி 14 வது வார்டுக்குட்பட்ட நீலி அப்பாதுரை விரிவாக்கம் தெருவில் பாதாள சாக்கடை பணிகள் முடிவுற்றதாலும், இயற்கை இடர்பாடுகளாலும் , சாலை மிகவும் பழுதடைந்து மழைக்காலங்களில் மழைநீர் தேங்குவதால் போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் மிகவும் சிரமமாக உள்ளதால் மேற்படி சாலையினை சீரமைத்து தருமாறு அப்பகுதியின் நகர்மன்ற உறுப்பினர் கோரியதை தொடர்ந்து அப்பகுதியில் ஆணையர் மற்றும் நகர்மன்ற தலைவர் ஆகியோர் நேரில் ஆய்வு செய்ததை தொடர்ந்து இச்சாலைகளை உடனடியாக சீரமைக்குமாறு நகர்மன்ற தலைவர் அறிவுறுத்தியதின்படி மேற்படி சாலைகளை சிமெண்ட் சாலைகளாக சீரமைக்கவும், அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.12.40 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்
2. பொதுமக்களின் அடிப்படை வசதியினை கருத்திற்கொண்டு மேற்படி பணியினை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ளவும், ஒப்பந்தபுள்ளி கோரி நடவடிக்கை தொடரவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

( ந.க.எண் 104/2023 /அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 439 நாள்: 05.03.2024

**தீர்மானம்:** 14 வது வார்டு நீலி அப்பாதுரை தெரு சிமெண்ட் சாலையாக சீரமைக்க ரூ.12.40 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி அளிக்கிறது. செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளவும் ஒப்பந்தபுள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கிறது.

## மேசைப்பொருள் எண் 53

பொன்னேரி நகராட்சியில் 15 வது வார்டுக்குட்பட்ட பஜனை கோயில் தெருவில் உள்ள மழைநீர் கால்வாய்கள் சாலையின் மட்டத்தை விட தாழ்வாக உள்ளதால் மழைக்காலங்களில் மழைநீர் சாலையில் வழிந்தோடுவதால் போக்குவரத்திற்கும், பொதுசுகாதாரத்திற்கும் கேடு விளைவிக்கும் நிலை உள்ளது. அதனை தொடர்ந்து அப்பகுதியின் நகர்மன்ற உறுப்பினர் கோரியதின்படி பஜனை கோயில் தெருவில் உள்ள மழைநீர் கால்வாயின் பக்கவாட்டு சுவர்களின் உயரத்தை அதிகரிக்கவும், அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ. 70,000/—ற்கு மன்றத்திற்கு அனுமதி வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. பொதுமக்களின் அடிப்படை வசதியினை கருத்திற்கொண்டு மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்படி பணிக்கான செலவினத்தினை அரசின் நிதியுதவி/பொதுநிதியின்கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
( ந.க.எண். 104 /2023 அ1 )

நகர்மன்ற தீர்மாண எண்: 440 நாள்: **05.03.2024**

**தீர்மானம் : 15** வது வார்டுக்குட்பட்ட பஜனை கோயில் தெருவில் உள்ள மழைநீர் கால்வாயின் பக்கவாட்டு சுவர்களின் உயரத்தை அதிகரிக்க மதிப்பீட்டு தொகை ரூ. **70,000/–** மன்ற அனுமதி வேண்டி, செலவினத்தினை அரசு நிதி / பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்குகிறது.

## மேசைப்பொருள் எண் 54

பொன்னேரி நகராட்சி **16** வது வார்டுக்குட்பட்ட அண்ணா தெரு, சிவராஜ் தெரு மற்றும் சிவராஜ் குறுக்கு தெரு ஆகிய தெருக்களில் பாதாள சாக்கடை பணிகள் முடிவுற்றதாலும், இயற்கை இடர்பாடுகளாலும் , சாலை மிகவும் பழுதடைந்து மழைக்காலங்களில் மழைநீர் தேங்குவதால் போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் மிகவும் சிரமமாக உள்ளதால் மேற்படி சாலையினை சீரமைத்து தருமாறு அப்பகுதியின் நகர்மன்ற உறுப்பினர் கோரியதை தொடர்ந்து அப்பகுதியில் ஆணையர் மற்றும் நகர்மன்ற தலைவர் ஆகியோர் நேரில் ஆய்வு செய்ததை தொடர்ந்து இச்சாலைகளை உடனடியாக சீரமைக்குமாறு நகர்மன்ற தலைவர் அறிவுறுத்தியதின்படி மேற்படி சாலைகளை சிமெண்ட் சாலைகளாக சீரமைக்கவும், அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.**13.90** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்

2. பொதுமக்களின் அடிப்படை வசதியினை கருத்திற்கொண்டு மேற்படி பணியினை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ளவும், ஒப்பந்தபுள்ளி கோரி நடவடிக்கை தொடரவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**( ந.க.எண் 104/2023 /அ1)**

நகர்மன்ற தீர்மாண எண்: 441 நாள்: **05.03.2024**

**தீர்மானம்: 16** வது வார்டு அண்ணா தெரு, சிவராஜ் தெரு மற்றும் சிவராஜ் குறுக்கு தெரு ஆகிய சாலைகளை சிமெண்ட் சாலைகளாக சீரமைக்க மதிப்பீடு ரூ.**13.90** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டியுள்ளதால், செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளவும் ஒப்பந்தபுள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கிறது.

## மேசைப்பொருள் எண் 55

பொன்னேரி நகராட்சி **16** வது வார்டுக்குட்பட்ட ஜீவா தெரு மற்றும் காந்தி தெரு ஆகிய தெருக்களில் பாதாள சாக்கடை பணிகள் முடிவுற்றதாலும், இயற்கை இடர்பாடுகளாலும் , சாலை மிகவும் பழுதடைந்து மழைக்காலங்களில் மழைநீர் தேங்குவதால் போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் மிகவும் சிரமமாக உள்ளதால் மேற்படி சாலையினை சீரமைத்து தருமாறு அப்பகுதியின் நகர்மன்ற உறுப்பினர் கோரியதை தொடர்ந்து அப்பகுதியில் ஆணையர் மற்றும் நகர்மன்ற தலைவர் ஆகியோர் நேரில் ஆய்வு செய்ததை தொடர்ந்து இச்சாலைகளை உடனடியாக சீரமைக்குமாறு நகர்மன்ற தலைவர் அறிவுறுத்தியதின்படி மேற்படி சாலைகளை சிமெண்ட் சாலைகளாக சீரமைக்கவும், அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.**15.30** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்

2. பொதுமக்களின் அடிப்படை வசதியினை கருத்திற்கொண்டு மேற்படி பணியினை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ளவும், ஒப்பந்தபுள்ளி கோரி நடவடிக்கை தொடரவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

( ந.க.எண் 104/2023 /அ1)

நகர்மன்ற தீர்மாண எண்: 442 நாள்: 05.03.2024

**தீர்மானம் :** 16 வது வார்டு ஜீவா தெரு மற்றும் காந்தி தெரு ஆகிய சாலைகளை சிமெண்ட் சாலைகளாக சீரமைக்கவும், மதிப்பீடு ரூ.15.30 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டியுள்ளதால், பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் ஒப்பந்தபுள்ளி கோரி நடவடிக்கை தொடரவும் மன்றம் அனுமதி அளிக்கிறது.

## மேசைப்பொருள் எண் 56

பொன்னேரி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15 மற்றும் 19 ஆகிய பகுதிகளில் வழியாக செல்லக்கூடிய நாடார் ரைஸ்மில் சாலை எனும் பெயரில் சாதிப்பெயர் இடம்பெற்று உள்ளதால், தமிழ்நாடு அரசின் அறிவிப்பின்படி சாலை, தெரு ஆகியவைகளில் உள்ள சாதிப்பெயர்களை நீக்க வேண்டும் என்பதால் பொன்னேரி பகுதியில் முதல் மருத்துவரும், சமூக சமத்துவத்திற்காகவும், சமூக நீதிக்காகவும் பாடுபட்ட மருத்துவர் அய்யா, E.விசுவநாதன் அவர்களின் பெயரை மேற்படி சாலைக்கு வைத்து அச்சாலை மருத்துவர் விசுவநாதன் சாலை என பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என்ற 19வது மன்ற உறுப்பினர் திரு. நல்ல சிவம் அவர்கள் முன் மொழிந்து 18வது மன்ற உறுப்பினர் அவர்களால் வழி மொழியப்பட்டதை மன்றத்தின் ஒப்புதலுக்கு.

நகர்மன்ற தீர்மாண எண்: 443 நாள்: 05.03.2024

**தீர்மானம் :** தமிழ்நாடு அரசின் அறிவிப்பின்படி சாலை, தெரு ஆகியவைகளில் உள்ள சாதிப்பெயர்களை நீக்க வேண்டும் என்பதால் பொன்னேரி பகுதியில் முதல் மருத்துவரும், சமூக சமத்துவத்திற்காகவும், சமூக நீதிக்காகவும் பாடுபட்ட மருத்துவர் அய்யா Dr.E.விசுவநாதன் அவர்களின் பெயரை wd 15 & wd 19 வழியாக செல்லக்கூடிய நாடார் ரைஸ்மில் சாலை என்னும் சாலை பெயரை சாதிப்பெயர் இடம் பெற்று உள்ளதால் பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என்ற 19 வது மன்ற உறுப்பினர் திரு.நல்லசிவம் அவர்கள் முன்மொழிந்து 18வது மன்ற உறுப்பினர் திரு. உமாபதி அவர்களால் வழி மொழியப்பட்டதை மன்றத்தின் ஒப்புதலுக்கு மன்றம் ஒப்புதல் அளிக்கிறது.

(ஒம்) கி. பரிமளம் விசுவநாதன்
நகர்மன்ற தலைவர்,
பொன்னேரி நகராட்சி

/உண்மை நகல்/

ஆணையர்,
பொன்னேரி நகராட்சி
திருவள்ளூர் மாவட்டம்.